ஓம்.

ஸத் குரவே நம:

# ஞானஸாதக ரொழுக்கம்

## பிரஹ்மா ணுவிளக்கம்

ஏ. சமரபுரி முதலியார் அவர்கள்

இயற்றிய

ஞான அப்பியாச முறைகள்.

S. தேவராஜ முதலியாரால்

சென்னை

ஸ்ரீ வேதவல்லி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

All rights ] 193ல் [Reserved.

Apply to:—

S. DEVARAJA MUDALIAR,
No. 3 Thottikalai Kumarappa Mudaly Street,
Choolai Vepery Post, MADRAS.

மஹான்

கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகளின்

சீடர்



E. சமரபுரி முதலியார்.

SRI BHARATHI PRESS, CHOOLAI, MADRAS.

ம்

# ஞானசாதக ரொழுக்கம்.

அநாதிமலத்தா லழுங்குமாருயிர்

அரண்டும் புரண்டு மிரண்டேநாள் அதற்கேனிந்த

வாடலும்பாடலும், அதிலுமொருநாள் (பிறப்பு)

ஆயிற்று மற்றொருநாள் (இறப்பு) தானென மதி

அரியரர்தம்முள் அபேதமென்றறி

அவாவற்றிருத்தலே அந்தக்கரணசுத்தி

அந்தக்கரணசுத்தியே அறிவையறிதற்சாதனம்

அடங்காமனமே அரும்பிணியாகும்

அடங்கும் மனமே அல்லலகற்றும்

அகத்தின்குறி முகத்திற்காட்டும்

அண்டத்தினுளவெலாம் பிண்டத்தினுமுள

அல்லும் பகலும் அறிவாயிரு

அண்ணலைக் காணி னவ னிவ னமே

அணுவையறிதலே ஆநந்தமயமாம்

அசைவற்றிருத்தலே அமலயோகம்

அருட்செல்வத்தை அடைவது நன்று

அறிஞர்கொள்வது அகமுகப்பூசையே
அறிவேசிவமென்பது அறிஞர்கொள்கை
அகப்பிரஹ்மாஸ்மி. அயமாத்மா ப்ரஹ்மம்.
அஜபாமந்திரம் அநுஷ்டான தந்திரம்
அமுதமிறக்கி அன்புடன்புசி
அண்டமென்பது குண்டலிமுனையே
அறிவாயிருத்தலே குறியற்றசாதனம்
அவனருளாலே அவன்றாள்வணங்கு
அந்தமிலாசமுத்திக் குபாயமேதென்றறி
அஞ்சக்கரத்தை நெஞ்சுணிறுத்து
அஞ்ஞானஞ் சுருங்க லதுவேமுத்தி
அந்திக்குமந்திர மறிந்தபின் தந்தைக்குமுன் மகன்
தானே பிறப்பான்
அஹிம்சைபரம தருமம் அன்புமலரா
லருச்சனைசெய்
அஞ்சக்கரத்தி னரும்பொருடன்னின்
நெஞ்சக்கருத்தினிலையறி
ஆசையறுதலே ஆநந்தநிலை
ஆசையற்றவிடமே ஆசாரமானவிடம்
ஆலயமேகாயம் அறிவே சிவலிங்கம்
ஆமைபோலைந்தடக்கல் அமலயோகமாம்

ஆசனமூர்த்தங்களற வகண்டாகாரபூசைசெய்
ஆதியுமந்தமுமில்லா அரும்பொருள்
சோதியை நானெனச் சொல்லுவான் சாது
ஆசையே துக்கம் நிராசையே தெய்வம்
இந்திரியநிக்கிரக மிதமெலாந்தரும்
இருவினையில்லெனி லில்லைபிறப்பே
இந்திரியம்விட்டோ னீசனைக்காணுன்
ஈறிலாதவன் ஈசனொருவனே
ஈமென்று கேட்டதுவு மென்னுள்ளே நின்றதுவும்
ஓமென்று சொன்னதுவு முற்றமறி
உண்முககாட்ட முண்மைவிளங்கும்
உன்னிலேஉன்னி யுத்தமனைக்காண்
உன்னிலுன்னுமென்ற வுறுதிமொழியொன்றைத்
தன்னிலுன்னி நன்னெறியைச்சார்
உழைப்பின்வாரா வுறுதிகளுளவோ
உற்றுற்றுப் பார்க்க வொளிதருமாநந்தமதை
நெற்றிக்கு நேர்கண்டு நீ நிலைத்திரு
எங்கும் பிரஹ்மம் பொங்கிநிற்கும் [க்தும்
ஓமொழிப் பொருளை நோக்கினுணருணராமை டோ
ஓங்காரமாய் நின்றவொருவத்துவிலே
பாங்காய் முளைத்த பயனையறி

கடவுள்சக்தியே கற்பிதவுலகம்
காரண வொழிவைக் காண்டல் நன்று
கன்மநெறியைக் கட்டாயஞ்செய்தொழி
கற்றதனாற்றொல்வினை கட்டறுகாண்
கர்ம்மிகள் நடுநிலைக் காணார்தம்முள்
கழப்பின்வாராக் கையறவுளவோ
கடலிலொளித்திருந்த கனலெழுந்து வந்தாற்போல்
உடலிலொளித்திருந்தசிவமொளிசெயக்காண்
கருணைத்திருவடியிற் கலந்துநில் [தே
காலசாதத்தைத்தள்ளாதேகாட்டுச்சாவடியிற்றங்கா
காமக்கடல் கடக்க வோமக்கனலுள்ளேபார்
இட்டவழி யெட்டிப்பிடிகொஞ்சமாயினுமகூட்டிமு
குண்டலி யெழுப்பின் விண்டெழுஞ் சோதி [டி
குலவியசிவபதங் குறுகாதவமே
கெடுவதொழித்து கேள்விமுயல்
சங்கரனன் பர்மாணசற்று நண்ணர்பரதனம்
சகலகேவலங்களைச் சாராதகற்றலே நடுநிலை
சமதிருஷ்டியே சச்சிதானந்தமாம்
சங்கு (இடம் சந்திரன்) சக்கிரமே (வலம்-சூரியன்)
சங்கரனைக்காட்டும்
சத்தத்தினுள்ளே சித்தத்தைக்கட்டு

சங்கற்பவிரிவேசகம். சத்தத்தினுள்ளே
சதாசிவங்காண்
சத்தம்பிறந்தவிடத்தே சகலகலையும்பிறக்கும்
சத்தப்பிறந்தவிடந் தன்மயமாய்நின்றவிடஞ்
சித்தம் பிறந்தவிடம் தேர்ந்தறிகாண்
சாதனசதுஷ்டய மடையின் சம்பன்னனவன்
சாதிசங்கற்பந் தனைவிடற் சமாதி
சாத்திரங்கற்ருர் வீடுற்ருர்சாற்று
சாதியிரண்டெனற் சிவசத்தியாகும் (சிவம்-ஆண்,
விந்து; சத்தி பெண், நாதம்)
சாவகாசமிருந்தாற் சாதுக்களைத்தரிசனைசெய்
சாந்திகோலைச் சதுராய்ப்பிடி
சிவாயமென்றவக்ஷரம் சிவனிருக்கு மக்ஷரம்
உபாயமென்றறிந்தோர்க்கு வுள்ளிருக்குமக்ஷரம்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங்காண்
சிவமுஞ்சத்தியுந் தெளிவிலொன்றே
சிந்தையடக்கினவரே சீவன்முத்தர்
சிந்தனைபுறமே செல்லிற் றுயரமாம்
சிவன்வேறென்றெண்ணிச் சிந்தைகலங்காதே
சிவமென்ற நீயே சிவம்
சிவாயநமவென சிந்தனைசெய். சித்தமே சுத்தசிவம்

சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின் மனனே நினைமின்மனனே
சிவத்தைப்பேணிற்றவத்திற்கழகு
சீவகாருண்ணியஞ் சிறந்தபுட்பம்
சும்மாயிருக்கச் சுகமுதயமாகும்
சும்மாவிருவென்ற சூத்திரத்தை நன்கறிந்தால்
அம்மாபொருளிதென அடைய விழுங்குவான்
செல்வமென்பது சிந்தையுண்ணிறைவே
செஞ்சரணத்தாளைச் செவ்வனேசிந்தனைச்செய்
செம்மதிப்பாலுண்டு சீராயிருக்க
எட்டாத பேரின்ப மெளிதில் விழுங்கும்
சோகம்பாவனை சொகுசாய்செய்
ஞானிக்கில்லை யின்பமுந் துன்பமும்
ஞானிக்குப்பிறவி நண்ணாதென்பது திண்ணம்
ஞானபூமியை நண்ணனலமே
ஞானியின்பெருமைபோல் ஞாலத்திலில்லை
ஞானகுருவை நன்றாய்ப்பணி
தன்னையறிதலே சாத்திரத்தின் பலன்
தற்போதம்போனவிடந் தற்பரமாகும்
தவத்துக்கொருவர் வித்தைக்கிருவர்
தன்னைமறப்பது தவத்திற்கழகு

தன்னிற்றன்னை யறிந்தவன் றலைவனவன்
தனித்தவிடத்திற் சமாதிசெய்
தனித்தவிடத்திற் றறிபோலிருப்பதே சமாதி
தனித்திரு-பசித்திரு - விழித்திரு சுகித்திரு
தானுயிருத்தலே தன்னையறிதலாம்
தாயுடன்சென்றுநீ தாதையைக்கூடிப்பின்
தாயை மறத்தல்தானே நிஷ்டை
திருவடி ஞானஞ் சிவமாக்குவிக்கும்
துட்டர்க்கு ஞானங் கிட்டாது திண்ணம்
துறவிபோனடிப்பவர் தூர்த்தராவர்
தூங்காமற்றூங்கலே துக்கநிவர்த்தி
தொண்ணூற்றறுவரையுந் துரிசறச்சுடு
நல்லாரைச்சேர்ந்தொழுகி நல்லறிவைநாடு
நடுவைநாடி நன்றாயிரு
நன்மைக்கடைப்பிடித்து நன்றாய்வாழ்
நாதவிந்துவே நற்றாய்தந்தையர்
நாட்டமிரண்டு நடுநாசியில்வை
நாதாந்தயோகமே நஞ்சுண்டகண்டன்
நாராயணாய நமவோமெனநாடு
நானாரோ நீயாரோ நன்றாம் பரமான
தானாரோ வென்றுணர்ந்து தவத்தைமுடி

நாட்டுக்கா லிரண்டும் விட்டு நடுவுக்காலூடேபோய்
ஆட்டுக்கா லிரண்டி னுள்ளே யமர்ந்திரு
நிர்க்குணபூசையே நிஷ்காமபூசை
நிஷ்காமபூசையே நிஜபூசையாகும்
நினைவொன்று நினையாமனிற்பதகம்
நித்திரையும்நினைப்பும் நீத்தலேவருணிலை
நின்றநிலைபேராமல் நினைவிலொன்றும்வாராமல்
சென்றநிலை முத்தியென்றுசேர்
நேசமோடுபர்பரத்து ணிற்பதுஞானநிட்டை
பறைபரும்முத்திக்கு பாரமார்த்தயுக்த்தர்
பகிர்முகாட்டம் பங்கப்படுத்தும்
பற்றற்றான்பற்றினைப் பற்றலே பரமவின்பம்
பகவற்கீதை பாராயணஞ்செய்
பலவிடத்தே மனதைப்பாய விடாது
நிலவரையினூடே போய் நேர்படு
பரப்பற்றிருப்பதே பரமானந்தம்
பகிர்முகப்பூசை பரமார்த்தமன்று
பாவனைபுரிந்தாற் பவமொழியாது
பாவனாதீதம் பதிந்தால்வீடே
பாவனைபழுத்தா லொழித்துவிடு

பாவனுதிதம்படியாவிடத்
தேகபாவனை யெஞ்ஞான்றுஞ்செய்
பாசஞானம் பரனையறியா
பிறவியறுதலே அருமையாம் பொருள்
பிறந்தவர்பெறும் பயன்பேரின்பவீடே
புணர்ந்தபாவமெலாம்பரிபூரண
முணர்ந்த ஞானியின் விழிபடவோடுமே
பொய்யைத்தள்ளி மெய்யைத் தழுவு
பொன்னொடு வெள்ளிபொருந்தின்
பொன்னவன்றுளதுவே போற்று
போகமாதரைப் போற்றுதலொழிந்து
ஏகநாத னிணை யடி யிறைஞ்சுமின்
மறைப்பொருள் காணின் மனத்துடிப்படங்கும்
மக்கட்பிறப்பாய் வருதலரிது
மண் பெண் ணாசை மறத்தல் மாண்பே
மன்மனமாட்டை மடக்கிமேய்
மலையிலக்கே மாமொழியாகும்
மதி ரவி கூடின் மனமடங்கும்
மனதையடக்க மனந்துணையாகும்
மந்திரமாவது தந்திரமாகும்
மன்மனத்துள்ளே மனோலயமாகும்

மாதர்போகம் மாளாத்துயரம்
மும்மலமொழிப்பதே முத்திக்கிடமாம்
முத்திக்கேது பத்தியாகும்
முன்னேயோகம் முயலல்வேண்டும்
மும்மலமொழித்தலே முப்புரமழித்தல்
முத்தியிலும் மும்முதலு முண்டெனல்வீணே
மெய்ஞ்ஞானமின்றி வீடதுபெறர்
வாக்கிறந்துநின்ற மவுனமது கிட்டினற்
றூக்கிறந்த தற்சுட்டு சார்தற்கிடமாம்
விருப்புவெறுப்பற்றால் வேதனைமாற்றும்
விந்தைக்கட்டின் சிந்தையடங்கும்
விக்கிரகாராதனை முற்றிலும் வீணே
வெட்டவெளியே வேதாந்தமென்பர்
வேதமுடியறிந்த வேதியரைக்கூட
பேதநிலையெல்லாம் பிரி

ஞானசாதகரொழுக்கம் முக்கியமானவை

முற்றிற்று.

ஓம்.

# பிரஹ்மாணுவிளக்கம்.

ஓம் * அ † உ ‡ ம - ஓம். அ - ஆண், சிவாம்சமாகிய வெண்ணிறமுள்ள விந்துவும்; உ - பெண், சத்தியாம்சமாகிய இரத்தநிறமுள்ள நாதமும்; ம - மகவு, அக்கினி யாம்சமாகிய சோதி சொரூப முள்ள குழவியுமாகிய விம் மூன்றுஞ் சேர்ந்து, ஓங்காரமும் அ - உ - ம எனும் பிரணவமாகி ஒங்குதலாயிற்று.

அப்பிரணவத்திலிருந்து நகரமாகிய நில மும், மகரமாகிய நீருஞ், சிகரமாகிய தீயும்,

---

* அ என்பது உதட்டினிதழைத திறப்பதாகும்.

† உ என்பது உதட்டினிதழைக் குவிப்பதாகும்.

‡ ம என்பது மேற்படியிதழை மூடித்திறப்பதா கும்.

இவைகளைத்தான் முறையே ரேசகம் பூரகம் கும் பகம் என்பர் பெரியார்.

வகாரமாகிய காற்றும், யகாரமாகிய ஆகாச முஞ் சேர்ந்து நமசிவய வென்றுற்பத்தி யாயின.

ஓம்=ஸ்தூலதேகத்தின்அரிய பெரியநாடி, ஆத்ம ஸொரூபம்; ந-ம=பெண் - நிலம், நீர், செம்புனல், சுரோணிதம், மாயாசொரூபம்; சிவ - ஆண், தீ, காற்று, வெண்புனல், விந்து, சிவசொரூபம்; ய=ஆன்மா, ஆகாயம், வெட்ட வெளி சொரூபம். இதற்கிணங்க,

திருமந்திரம்.

தரணி சலங்கனற் காற்றத்த வான
மரணிய பானு வருந்திங்க ளங்கி
முரணிய தாரகை முன்னிய வொன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே.

இந்த பஞ்சாக்ஷரமானது ஸ்தூலதேகத்தில் சூக்குமமாய் சர்வசக்திகளையும் தம்முள் அடக்கி வைத்துக் கொண்டு பிரகாசிக்கின்றன வாதலால் முதலில் ஓம் என்றும், பின்

னர் ந ம சி-வ என்றும் பிறகு ய என்னும் இவ்விராஜ * மந்திரத்தை வாக்கினல் † ஜபிக் கக்கூடாமையினல் அதனதன் ஸொரூபங் களைக்கரநியாசம் (கைக்கிரியை) எனும் ‡ தந் திரத்தினல் தரிசிக்கவேண்டும்.

## தேவாரம்.

கொங்கலர் வன்மதன் வாளியைந்தகத்
தங்குள பூதமு மஞ்சவைம் பொழில்
தங்கரவின்பட மஞ்சுந்தம்மு டை
யங்கையிலைவிர லஞ்செழுத்துமே.

அக்ஷரமென்பது எழுத்துமன்று எண்ணு மன்று சொரூபமாம். இந்த பஞ்சஸொரூபத் தைத் தரிசிக்க ஞானகர்ம்மா வேற்பட்டிருக் கின்றது. இதற்கு ஒரு மொழியு மெனலாம்.

---

* மந்திரம்-நிலை பெற்ற மனத்தின் திடம்.

† ஜபித்தல் - ஸ்தூலத்திலிருந்து மேற்சொன்ன பஞ்ச சொரூபங்களை வெளிப்படுத்துதலே யாம்.

‡ தந்திரம் நிலை பெற்ற தம் திடம்.

இவ்வொரு மொழியினுல் ஓங்காரத்துடன் கூடிய பஞ்சபூதங்களை அல்லது பஞ்சசொரூபங்களைத்தரிசித்து ஆறு ஆதாரங்களையுங் கடந்து, துவாதசாந்தப் பெருவெளியை யடைந்தாங்கு சதாவசைந்துக் கொண்டிருக்குந் தீபச்சுடர் முனையைத் திடப் பார்வையினு லசையாது நிறுத்தி நிற்பதுவே தவமாகும்.

திருமந்திரம்.

விளக்கினை யேற்றி வெளியை யறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே.

கரந்துங் கரந்திலன் கண்ணுக்குத் தோன்ருன்
பரந்த சடையன் பசும்பொன் னிறத்தன்
அருந்தவர்க் கல்லா லணுகலு மாகான்
விரைந்து தொழப்படும் வெண்மதி யானே.

இத்தவத்தின் முதிர்ச்சியடைந்த ஞான சாதகருக்கு உலகமானது அநித்தியமாகவும்

தன்னெதார்த்த சொரூபமே எங்கணும் நித்தியமாக விளங்கவுங்காண்பர்.

## ஞானவாசிட்டம்

மெல்லிதாகிக் குளப்படியாய்
விவேகப்புந்திக் காமுலகு
மல்லவாகிக் கரைகாணு
வாழயாகு மதியில்லோர்க்
கெல்லையிலதா லறிபொருளா
லெண்ணப்படாதாய்ச்சாந்தமுமாய்ச்
சொல்லுமெல்லாமாய் நினைவு
தோன்ருச்சற் சிற்சுகமுண்டாம்.

அன்றியுந்தேகத்தில் சூக்குமமாய்ப் பிரகாசியாநின்ற ஓங்காரநாடியின் நடு பாகத்தில் இடைகலையாகிய அபானனுடியும் பிங்கலையாகிய பிராணனுடியும் கீழும் மேலுமாகச் சஞ்சரித்துக்கொண்டு சீதளத் தன்மையையும் வெப்பத்தன்மையையும் தருகின்றன. இவ்விரண்டு நாடிகளையும் பிரணவத்தினுச்சியா

கிய சுழிமுனையில் சேர்த்துவிட்டால் மேற்கூறிய சடானந்த பிரகாசிக்கும்.

ஞானவாசிட்டம்.

ஓதுமளவிலறிந்திருந்து
  முயிர் நோக்கென நீயுரைசெய்த
தேதுபகவென்றலும் புசுண்ட
  னிசைக்கு நீவிங்கெதிர்காணும்
பூதவுடலா மனைநடுவே
  பொருந்துமிதய புண்டரிகச்
சீதமலரினுள்ளிரண்டு
  செறியும் பிராண னபானனென.

விராவிவருபுறநின்றுமபான னென்னும்
  வியன்மதியமேனியெல்லாங் குளிரவிக்கும்
பிராணனெனுஞ் சூரியன்முன் கனலாயுள்ளே
  பேசிய விவ்வுடற்பாகம் பிறக்கப்பண்ணு
மிராதுழலுமபான னெனு
  மதியினுட் சேரியற்கலைகள்
பிராணனெனு மிரவியாலே
  யுராவி விழுங்கப்பட்ட தெவ்கேயந்த
வுபர்பதமூற்றூற் பின்னையொருநோயுண்டோ.

## சிவயோகம்.

சிவோஹம், ஸோஹம், ஓம் இவை ஒரு பொருட்கிளவி. யோகமென்பது விந்துவாகிய சிவத்தையும், நாதமாகிய சத்தியையும் புருவ நடுவில் திடப்பார்வையினு லொருங்கு சேர்த்து ஓங்காரமாகிய பொருளை, அஃதாவது குண்டலியை யெழுப்பி, ரேசகம் பூரகம் கும்பகங்களாகச் செய்வதாகும்.

### திருமந்திரம்

விந்துவு நாதமு மேருவி லோங்கிடிற்
சந்தியி லான சமாதியிற் கூடிடும்
அந்த மிலாத வறிவி னருட்பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே.

ரேசகம்:—சூரியனையும் சந்திரனையும் ஒன்றாகக் கலக்கவைத்தல், அஃதே அமாவாசை, அமரபக்ஷம், அல்லது சூனியம், கிருஷ்ண பக்ஷம், தேய்பிறை.

### ஔவைக்குறள்.

தோற்றுங் கதிரவ னுண்மதி புக்கிடில்
சாற்று மமாவாசை தான்.

உதிக்கு மதியமுங் கண்டங் குறங்கில்
மதிக்கு மமாவாசை யாம்.

பூரகம்:—மேற்கூறிய விரண்டையும் பூரிக்கச்செய்தல்! அஃதே பூர்வபக்ஷம், சுக்கில பக்ஷம் அல்லது வளர்பிறை என்பன.

கும்பகம்:— பிராணவாயுவையும் அபான வாயுவையும் பிரணவத்தின் உந்திக்கமலத்தி லடைத்து விடுதல். அஃதே பௌர்ணமி.

ஔவைக்குறள்.

ஏறு மதிய மிரங்கி லுறங்கிடும்
கூறுமப் பூரணை கொள்.

மதிக்குட் கதிரவன் வந்தங் கொடுங்கில்
உதிக்குமாம் பூரணைச் சொல்.

அமாவாசை பூரணை யாகு மவர்க்குச்
சமனு முயிருடம்பு தான்

ஸ்தூலதேகத்தில் பிரகாசியா நின்ற பிராணன், அபானன் எனும் இரண்டு வாயுக்கள் மேலுங் கீழுமாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. சூரியன் கிழக்கேஉதித்து சுடர் குறைந்து மேற்கே அஸ்தமித்தலையும், சந்தி

ரன்மேற்கே உதித்து கிழக்கே பெருகித்தேய் தலையுமே கீழும் மேலுமாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற வென்பன.

இவைகளை மேற்கூறப்பட்ட பகிர்முக ரேசக பூரக கும்பகங்கள் செய்து வாணுளை வீணுளாக்காமல் உண்முக ரேசகப், உட்பூரகம், உட்கும்பகங்கள் செய்ய வேண்டும். இதனுல்.

ஔவைக்குறள்.

அண்டத்திலு மிந்த வாறென் றறிந்திடு
பிண்டத்திலு மதுவே பேசு.

இதை மேற்கூறப்பட்ட பகிர்முக ரேசக பூரக கும்பகங்களினுல் உண்முக ரேசக பூரக கும்பகங்கள் செய்ய வேண்டும். பகிர் முக ரேசகம் பூரக கும்பகங்கள் பழகினுலொழிய உண்முக ரேசக உட்பூரக உட்கும்பகங்கள் செய்ய சாத்தியப்படா.

பகிர்முக ரேசக பூரக கும்பகங் களுக்கு முறையே ஐம்-கிலிம்-சௌம்-மந்திர ரூபகமாக மறைத்துக் கூறப்பட்டிருக்கின்றன

இந்த யோகத்தை யப்பிய சிக்குங்கால் பிரண வத்தின் உச்சியாகிய தலையைக் கோணுமல் புருவ மையத்தின் மேற்பாகத்தில் நேர்நிறுத்துவதே தராசு முனையாம்.

ஔவைக்குறள்

இரேசக பூரக கும்பக மாற்றில்
தராசுபோ னிற்குந் தலை.
இரேசிப்பது போலப் பூரித்து நிற்கில்
தராசுமுனை நாக்கதுவே யாம்.

ரேசகம் 32 - மாத்திரையளவாகவும், பூரகம் 16 - மாத்திரை யளவாகவும் கும்பகம் 64-மாத்திரையளவாகவும் செய்துப் பழகல் வேண்டும். கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதும் மாத்திரைக்களவாம்.

ஔவைக்குறள்

இரேசக முப்பத் திரண்டது மாத்திரை
பூரகம் பத்தாறு புகும்.
கும்பக நாலோ டறுபது மாத்திரை
தம்பித் திடுவது தான்.

முன்ன மிரேசி முயலுபின் பூரகம்
பின்னது கும்பம் பிடி.

உள் ரேசகம் உட்பூரகம் உட்கும்பகங்களுக்கு மாத்திரையளவே கிடையா.

மூக்குமுனை யென்பது வேலாயுதத்தைப் போல் பிரகாசிக்கின்ற பிரணவத்தின் மேன் முனையாகுமென மேதாவிகள் அறைவர்.

உந்திக்கமலமாவது மேற்கூறிய பிரணவத்தின் மத்தியபாகம். இஃதையே ஹிருதயக் குகையென வியம்பின ரிமையோர்.

மூலாதாரமென்பது மேற்படி பிரணவத்தின் கீழ்பாகமெனக் கிளர்த்தினர்.

இம்மூன்றையும் அடி நடு முடியென வறைந்தனர் ஆன்றோர். இவ்வஸ்துக்கள் வண்ணமாகப் பாராது நம், மூக்கு முனையைப் பார்ப்பதனாலும் நம் உந்திக்கமலத்தை யுற்று நோக்குதலாலும், நம் நாபிக்கமலத்தை நாடுவதாலும் யாதுபயனைத்தரும்? தாராது. இப்பிரணவத்தின் முனையைப்பார்ப்பதன் பொருட்டே முன்னோர்கள் புருவமையத்தை இலக்ஷி

யார்த்தமாகக் குறிப்பித்தார்கள். சுழிமுனை-பிரணவத்திஹுச்சி.

### திருமந்திரம்

* நெற்றிக்கு நேரே புருவத்திடை வெளி
யுற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடஞ்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே.

இதுவரையிற் கூறிய சாதனைகளை விடா முயற்சியாய் முதன் முதல் அப்பியசிக்கும் முறை யாதலால் முற்கூறலாயிற்று. இம் முதற் சாதனையை அப்பியசித்தபின்னர் தான் ஞானத்தை யடையமுடியும்.

பராங்கி முத்திரையினுல் நாதத்தை யெழுப்பி யதன் முடிபாகிய பன்னிரண்டங்குல வளவில் (அஃதாவது சாதகன் சிரசினுச்சியி லிருந்து பன்னிரண்டங்குல வுயரம்) மனதை நிறுத்தியதால் யெழும்பின அநாதத்

* எல்லாமாந்தர்க்கும் புருவத்தி னிடையே மூளை யினகத்தே நடுவில் இவ்வருட்கண் அமர்ந்திருக்கின்றதென்பது திரண்ட பொருள்.

தொனி முடிவு பெறும். அத்துவாதசாந்தப் பெருவெளியில் மனம் அதனுடன் லயிக்கச் செய்து தினந்தோறும் பழகிவரின் சாதகர்க் கோரின்பமான வுணர்ச்சி யுண்டாகும். இச் சாதனை நிலைக்குத்தான் பராங்கி முத்திரை யென்று பெரியார் பகர்ந்தனர்.

### தாயுமானவர்

× × 'சத்தமற மோனநிலை பெற்றவர்களுய் வர்காண் சனகாதி தணிவிதன்றே' × × × ×

என்று கூறியிருப்பதையுங்காண்க.

### திருமந்திரம்

சத்தமுஞ் சத்த மனமு மனக்கருத்
தொத்தறி கின்ற விடமு மறிகிலர்
மெய்த்தறி கின்ற விடமறி வாளர்க்கு
அத்த னிருப்பிட மவ்விடந் தானே

நாத முடிவிலே நல்லா ளிருப்பது
நாத முடிவிலே நல்யோக மிருப்பது
நாத முடிவிலே நாட்ட மிருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே.

இடப்புரிச்சங்கு வலம்புரிச்சங்கு என்றிரண்டு வகைப்படும். அவை யிரண்டு செவிகளையுங்குறிக்கும். அவைகளி லொன்றாகிய வலம்புரிச்சங்கைத்தான் சாதகர் ஊதவேண்டும். (ஊதல்=பழகல்.) அஃதெங்ஙனம் எனில், மனதை இந்திரியவழி பலவிடத்துஞ் செல்லவிடாது தடுத்து வலது செவியிலேயே திடமாக நிறுத்தின் சில நிமிடங்களுக்குப்பின் ஒருவிதமான சத்த மெழும்பும் அச் சமயத்தில் உடனே மேற் கூறிய விடத்தில் மனதை நிறுத்தலே யோகமாம்.

இப்பாவஸ்துவைக் காணும் பொருட்டே தான் முன்யோகத்தை யப்பியசித்து அதன் வாயிலாய் முடிவில் ஞானமடைய வேண்டும்.

தாயுமானவர் பாடல்

யோகியர்க்கே ஞான மொழுங்காம்பே ரன்பான
தாகியருப்யோகமுன்னே சார்ந்தோர் பராபரமே.

ஆகினும் தவத்தையும் யோகத்தையும் சாதகர் செய்தலினாலேயே திருப்தியடைந்து களிப்புற்று அம்மட்டில் நின்று விட்டால்

ஞானம் சித்தியாகாது. சரியை கிரியை யோகம் இம்மூன்றுஞ் ஞானமடைய சாதனங்களே தவிரவேறன்று.

### பிரபுலிங்கலீலை.

உரைசெயிற் பரமஞான
 மொன்றுமே முத்திக்கேது
சரியை நற்கிரியை யோகந்
 தாமொரு மூன்றுஞான
மருவுதற்கேது வென்று
 மறைபுகன் றுரைக்குமிந்தக்
கருவியைப் பொருளென்றெண்ணிக்
 களிப்பவர் கயவரன்றே.

### திருமந்திரம்.

எண்ணு யிரத்தாண்டு யோக மிருக்கினுங்
கண்ணா ரமுதனைக் கண்டறிவா ரில்லை
உண்ணுடி யுள்ளே யொளிபெற நோக்கிற்
கண்ணுடி போலே கலந்திருந்தானே.

### ஞானம்

ஞானமெனபதியாது? சத்து, சித்து இவ்விரண்டு மொன்று சேர ஆனந்தம் ஜனித்து

சச்சிதானந்தம் எனப் பெயர் பெற்ற நிலையே யாகும்.

அச்சச்சிதானந்த நிலையிலிருந்து பழகிவருஞ் சாதகர் எவ்விடத்தும் எப்பொருளினிடத்தும் பிரஹ்மம் பிரகாசிப்பதை தரிசிப்பர். இப்பிரஹ்ம வஸ்துவைத்தான் அணுவென்று அறிஞரறைவர். அவ்வணுவொன்றை யாயிரங் கூறிட்டு அதிலொரு கூறுக்குச் சமானமாகவும் பிரகாசத்திற் கெல்லாம் அதீதப் பிரகாசமாகவும் நம்முடலி லிருந்து பிரகாசித்துக் கொண்டிருக்கும் வஸ்து எதுவோ அல்லதே பரமாணுவாகும்.

### திருமந்திரம்

அணுவி லணுவினை யாதிப் பிரானை
அணுவி லணுவினை யாயிரங் கூறிட்
டணுவி லணுவை யணுகவல் லார்கட்
கணுவி லணுவை யணுகலு மாமே

அணுவு ளவனு மவனு ளணுவும்
கணுவற நின்ற கலப்ப துணரார்

யிணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்றான் சராசரந் தானே.

## ஞானவாசிட்டம்

என்னதுடலிற்சிற்கதிரா யிலங்குதெய்வமாமெ ன்ன, வுன்னு மனங்கண்வாக்குக்களுடைய சத்தித் திரளெல்லாம், பின்னமின்றிநாயகனைப் பிரியாமக ளிர்போனளுந், துன்றுமென்றேயனவரதந்தொடர் பாவனை செய்திடல்வேண்டும்.

இச்சிற் கதிரினிடத்துஉலகமும், உலகத்தி னிடத்து பிரஹ்மமும் ஒன்றிற் கொன்று பிரி யாது நிலை பெற்றிருக்கும். இது பற்றியே ஞானிகள் உலகத்தை பிரஹ்ம மயமென்று சொல்லுவார்கள்.

## ஞானவாசிட்டம்

செவ்விதாங் கல்லில் வனசமுஞ்
சங்கமுத் திகிரியுமெனுங் கீற்று
வவ்வுகின்றதோர்சுழுத்தியாமவத்தையாய்
மறவுறுமதுபோலத்
தவ்வில் சித்தினுளுலகங்கண்முழுவதும்
தங்குமால் வேறன்றி

யெவ்விடத்திலியாதெப்படி யிருந்ததவ்
விடத்தினப்படி யென்ப.

இப்பிரஹ்மத்தை தரிசிக்குங்கால் தன்னை யும் உலகத்தையும் மறைத்ததுவாக நிற்கும்.

## தாயுமானவர் ஆனந்தக்களிப்பு

பேசா விடும்பைகள் பேசிச்-சுத்தப்
பேயங்க மாகிப் பிதற்றித் திரிந்தேன்
ஆசா பிசாசைத் துரத்தி - ஐய
னடியிணைக் கீழே யடக்கிக்கொண்டாண்டி
சங்கர சங்கர சம்பு.

## மத்தியகதம்

இந்நிலையையே பிரஹ்ம ஐக்கியமென்றும், மத்தியகதம் என்றும், நடுவு நிலை யென்றும், சகல கேவலங்க ளென்றும், சாந்தி தாந்தி யென்றும், சும்மாயிருத்தல் என்றும், பிரஹ் மாநு சந்தானமென்றும், இராப்பகலற்றவிட மென்றும்,ஞானுஞ் ஞானரகிதநிலையென்றும், பாவா பாவ ரகிதஸ்தானமென்றும்,நினைவிற ந்து நின்றவிட மென்றும், நனவிற் சுழுத்தி

யென்றும், நினைப்பும் மறப்பு மற்ற மத்திய கதமாயிருத்தலின் அதிற்றான் தனது நிஜவடிவம் விளங்கும்.

## ஞானவாசிட்டம்

சொரூபம் விட்டகலின் மோகமாம் வேறு
சொல்லிட முன்புபின் பில்லை
யொருபொரு ணினைவை யொழிந்துமே லப்பா
லொருபொரு ணினைவுறி னந்த
விருபொரு ணடுவு ணினைவற விருக்கு
மிதுசொரு பத்தியல் பிதுதான்
மருவுகற் பனைமாண் டசைவில்கற் போலாய்
வருஞ்சுழுத்தி தீர்வடிவாம்.

## வள்ளலார்

ஒருபொருளை நீத்தங் கொருபொருளைப் பற்றி
யிருபொருளும் போக்கி யிடையே-யொருபொருளு
மற்றநிலையேதோ வஃ தன்னிலை யென்றான்
குற்றமற்ற ஞான குரு.

## திருமந்திரம்

நடுவுநின் றார்க்கன்றி ஞானமு மில்லை
நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை

நடுவுநின் றூர்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றூர்வழி நானுநின் றேனே.

நாம ரூப வடிவப்பிரபஞ்சம் நமது சங்கற்பத்தை விட்டிருக்கின்ற விடமே மத்தியகதமென்கிற நனவிற் சுழுத்தி நிலையாகும். சங்கற்ப முள்ளபோது உலகந்தோன்றி அஃதின்றியபோது உலகந்தோன்றாது பிரஹ்மம் தோன்றும். சகலம் = நினைப்பு, சாக்கிரம், சொப்பனம். கேவலம் = மறப்பு, சுழுப்தி.) சங்கற்பத்தைவிட வுலகமில்லை, நம்மைவிட்டுச் சங்கற்பமுமில்லை. நாமே யாவுமாயும் அல்லவாயும் இருக்கின்றோ மென்பதும் இதனால் ஏற்பட்டது. சங்கற்பம் நம்மிடத்திலிருந்தெழுகின்றதனால் அதை விட்டிருத்தற்கு யார்க்குமுடியவில்லை. சங்கற்ப மெழுமிடத்தையே உற்றுற்றான்றிப் பார்த்தங்கேயே அதைவதைத்தால் சங்கற்பம் எழாது. சங்கற்ப மென்பதே நினைப்பு. நினைப்பு மெழுமிடத்து மறப்பெழா. நினைப்பு மறப்பற்ற நிலையானதே மத்தியகத மென்றறி. அந்நிலையில் சங்கற்ப விகற்பங்களற்று நானாகவே

விளங்கும். ஆங்கு கர்த்தவ்வியமுந் தோன்றா. அப்படி அந்த மத்திய கதத்தி லிருப்புழி சுட்டிறந்த சுகாதீத வடிவாய் விளங்கி வாழ்வாய்.

அவிரோதவுந்தியார்

பதைத் தெழாதுள்ளம் பதைப்பாய் பதைக்கில்
வதைப்பாயங்கங்கே யென்றுந்தீபற
மாயுமனப்பே யென்றுந்தீபற.

ஞானவாசிட்டம்

எந்தவெந்தவாதனைகளிதயத்தெழுந்தவவையெல்லா
மந்தவந்த விடத்தழிக்கினதுவே மாயைக் கழிவாகு
முந்துபோகமோகமென மொழியுமிருவாதனைவிட்டு
வந்தபாவாபாவமறமாற்றி விகற்பமறவாழ்வாய்.

அவிரோதவுந்தியார்

ஆங்கறியாமையுஞ் சாராதறிவொடுந்
தூங்குவாய் நாளுமென்றுந்தீபற
தோன்றும் பரம்பொருளுந் தீபற.

திருமந்திரம்

பொங்கு மிருணீக்கும் புண்ணியக் கூத்தனை
யெங்குமாய் நின்றாடு மேகம்பக்கூத்தனை

கங்குல் பகலினுங்காணுத கூத்தனை
யிங்கெனி டமாக யான் கண்ட வாறே

கந்தரநுபூதி

ஆனு வமுதே மயில்வே லரசே
ஞானு கரனே நவிலத்தகுமோ
யானு கியவென் னைவிழுங்கி வெறுந்
தானுய் நிலைநின் றதுதற் பரமே.

வாழ்கவே வாழ்கவென் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத்தான் பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தவன்ருள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

ஓம் தத் சத்

பிரஹ்மானு விளக்கம் பெறுவாயாக.

பிரஹ்மானுவிளக்கம்

முற்றிற்று.

# ஞா ன ஸா த க ஸ ஹா யம்.

இது, கைவல்லியபோகத்தை அடைவிற்கின்றியமையாததாயும் மஹான்களாலனுபவித்த பரம இரகஷிய சாதனவுளவுகளையு முணர்த்துகின்றனவாயுமுள்ள ஓர் அபூர்வமான நூல். மானுட ஜன்மமெடுத்த வொவ்வொருவரும் ஜனன மரணதுக்கநிவர்த்தியும் பரமானந்தப்பிராப்தியும் அடையவேண்டுமென்பதே மகருஷிகளின் உடன்பாடானதுபற்றி, சகல வேதாந்த சித்தாந்த தத்துவ ரகஸ்யங்களை யெல்லாம் எளிதி லுணருமாறும், மனதை யிந்திரிய வழிச் செல்லாதுத் தடுத்துத் தேகத்துக்குளிருக்கும் ஆகாசத்தில் நிறுத்தி மகாவாக்கியத்தை அஜபையாய்ச் சிந்திக்கச் செய்து, அஞ்ஞானமே சிந்தனையை நாடாது அச்சிந்தனையுதிக்கு மிடத்தையே நாடி சப்த ஸ்பரிசாதிகளிறந்து ஆண்டு நிகழும் சூனியத்தில் தைலதாரைபோனின்று சுழுத்தி மனோராஜ்யமு முண்டாகா வண்ணங்காத்துப், பிரஹ்மாகார விருத்தியுதித்து நனவிற் சுழுத்தியாநந்தத்தில் பரவசமுற்று திரிபுடிரகித ஸ்திதியைப்பெற்று கிருத கிருத்தியத்தன்மையை யடைதலும் இப்பேற்றைப்

பெறுதற்கு மற்றோ ரேதுவாற்கூறலுறும்
பாவனாதீதநிஷ்டையின் உளவுகளு ... டா
னுபூதி சாராம்சத்திரட்டும் அத ... ருந்த
ரார்த்தவுரை வரைந்தும், குருத்ய ... ராத
ஸ்மரணத்ரயம், வைராக்யடிண்டி ... கோ
விந்தத்வாதசமஞ்சரிகாஸ்தோத் ... ர்த
சமஞ்சரிகாஸ்தோத்திரம், தக்ஷி ... த்
அட்டகம், மநீஷாபஞ்சகம், வே ... பஞ்
சகம், தசகம், விவேகஷட்கம், ... பஞ்
சகம், சொரூபலக்ஷண விருத்தி. ... கா
லாட்டு, ஆநந் ... ய முத ... றை
மஹான் கரபாத்திர ச ... பிரச ... மிக
ளால், ஒருங்கே திரட்டி ஞ ... ஸ ... ஹா
யம் எனப்பெயரிட்டதும் என் ... திய
தாக இயற்றிய ஞானசாதக ரே ... மும்
பிரஹ்மானு விளக்கமும் சேர் ... கிய
இந்நூல் இப்போது வெளிவந் ... து.
இராஜயோக சாம்பிரதாய அ ... தை
யே எடுத்துக்கூறும் இந்தஞான ... ஹா
யம் ஒவ்வொருவரும் ... ஞுறத் ...
புத்தகம் 1-க்கு ரூபா 1 0 ... வி ... ற்
சார்ச்சு, ரிஜிஸ்டிரேஷன் பீ ... பிர ... கம்.

எ - சம ... ரி முத்